முக்கிய காரணம் சர்க்கரை, மற்றும் இதர கட்டுப்பாட்டு சாமான்கள் விற்பனையாகாதது. இந்த பண்டகசாலையின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும், ஒரு 'மக்கள் அங்காடி' திறக்கவும் இதற்கு அரசு ரூபாய் 14,000 நிதியுதவி அளித்துள்ளது. மத்திய அரசின் உதவியைப் பெறும் பணிகளின் கீழ் உதவி பெற இப்பண்டகசாலைக்கு புனரமைப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பும்படி இராமநாதபுரம் சரக இணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே, புதிப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

* திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் புதுப்பிப்பதற்காக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திருவில்லிபுத்தூர் பண்டகசாலை பலவிதமான பலகீனங்களைக் கொண்டதாக இப்போது இருக்கிறது. அதிகாரிகளும் டைரக்டர்களும் சரியாக இயங்கவில்லை. வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்டாத நிலைமையினால் அதை நடத்த முடியாத நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியைத் சேர்ந்தவர்களும் அதிலே இருக்கிறார்கள், சீனி வினியோகத்திலே முறைகேடு நடந்திருக்கிறது. அதைப்பற்றி விசாரணை நடைபெற்றிருக்கிறது. தனியார்களுக்கு டெண்டர்களே இல்லாமல் விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைய அரசு துரிதமாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் அவசர நடவடிக்கைகள் மூலமாக தனிப் புனர் விசாரணை, கூட்டுறவுச் சட்டத்தின் 65 வது பிரிவின்படி விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையைக் கலைக்காமல் குறைபாடுகளைக் களைந்து அதைச் சீர்திருத்துவதற்காக ஆவன செய்யப்பட்டு வருகிறது, குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்ற முறையிலே தான் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(5) ஒழுங்குப் பிரச்சனைகள்.

(அ) உறுப்பினர் தம் பேச்சுக்கு ஆதாரம் கொடுப்பது குறித்து.

திரு. தாழை மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் பாலா பழனூர் தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி பாராளுமன்றத்தில் பேசிய ஒரு கருத்

தினை நான் இங்கே எடுத்துக் கூறிய போது துணைத் தலைவர் அவர்கள் அதற்கான ஆதாரத்தை, பத்திரிகைக் குறிப்பைத் தர வேண்டுமென்று சொன்னார்கள்.

ஒன்றரை மணிக்குள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒன்றரை மணிக்குள் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களிடத்தில் கொடுத்தேன். அவைகள் அலை ஓசை, முரசொலி என்ற காரணத்தால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒழுங்குப் பிரச்னை என்ன ? நீங்கள் தீர்ப்பைக் குறை கூறுகிறீர்களா ?

திரு. தாழை மு. கருணாநிதி : இப்படிப்பட்ட பத்திரிகைகள் என்பதால் தங்கள் மனத்திற்குத் திருப்திப்படவில்லை என்று கருதுகிறேன். ஆகையினாலே, 6–12–78-இல் வருகின்ற இன்டியன் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வது என்னவென்றால், இப்பொழுது விளக்கம் தேவையில்லை, ஏதாவது இருந்தால் எழுத்து மூலமாகத் தரவேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அது உங்களுடைய கவனத்திற்கு வராத விஷயம் என்று கருதுகிறேன். துணைத் தலைவரவர்கள் அவையிலே இருந்தபொழுது இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. அந்தப் பத்திரிக்கையைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காட்டினார்கள், அலை ஓசையை மட்டும் காட்டினார்கள்.

திரு. மு. கருணாநிதி : இப்பொழுது, பார்லிமெண்டிலே பாராளுமன்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பேசிய பேச்சு, யு.என்.ஐ. யில் அடிக்கப்பட்டு, அது 'இந்து' 'இன்டியன் எக்ஸ்பிரஸ்', பத்திரிக்கைகளில் வந்திருக்கின்றன. நானே படித்துக் காட்டி விடுகிறேன். கட்சித் தலைவர் என்ற முறையில் * * *
இதை அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதைத்தான் நேற்று தாழை கருணாநிதி குறிப்பிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாலும்,

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க நீக்கப் பெற்றுள்ளது.

அந்தப் பத்திரிகையில் வெளி வந்திருப்பதையும், பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் அப்படித்தான் இருக்கிறதா என்பதைப்பற்றியும், எந்தப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறதோ அந்தப் பத்திரிகையின் ஆசிரியரைக் கூப்பிட்டு அவர் உறுதி தந்த பிறகு, அதை நான் ஏற்றுக் கொண்டு பிறகுதான் தீர்ப்பு கூறவேண்டும். இதை நேற்று அவர் என்னிடத்தில் தரவில்லை. நேற்று அலை ஓசை பத்திரிக்கையைத் தந்தார்கள். ஒன்றரை மணிக்குள் தர வேண்டுமென்று துணைத் தலைவரவர்கள் சொன்னதற்கேற்ப அலை ஓசையைக் கொண்டு வந்து காட்டினார்கள். மீதிப் பத்திரிகைகளில் வந்திருக்கிறதா என்று காட்ட அவரால் அப்பொழுது இயலவில்லை. (குறுக்கீடு) இன்றைக்குக் கொடுப்பதைப் பற்றிப் பேச்சு இல்லை. தீர்ப்புக் கூறுவதற்கு முன்னால், ஒன்றரை மணிக்குள் இந்த ஆதாரங்களை என்னிடத்தில் தரவில்லை. அதுபற்றித் தீர்ப்புக் கூறியாகிவிட்டது. மேலும் இப்படிப் பிரச்னை எழுப்புவதாக இருந்தால், எழுத்து மூலமாகத் தந்து, நான் அந்தப் பத்திரிகையையோ அல்லது பாராளுமன்ற குறிப்புகளையோ வரவழைத்து அது உண்மை என்று கருதினால் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இப்பொழுது தீர்ப்பு கொடுத்தாகி விட்டது. மேலும் ஏதாவது இருந்தால் எழுத்து மூலமாக எழுதித் தந்தால் அதன்மீது ஆய்ந்து தீர்ப்பு கூற வழியிருக்கிறது.

4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(அ) திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலையின் செயல் முறை குறித்து—தொடர்ச்சி.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கூட்டுறவு பண்டக சாலைகளுக்குப் பலசரக்கு, ஜவுளி ஆகியவற்றைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொள்முதல் செய்து கமிஷன் வாங்குவதாகத் தெரிகிறது. மேலும் கூட்டுறவு பண்டக சாலைகளில் விற்கும் விலைக்கும் தனியார் கடைகளில் விற்கும் விலைக்கும் வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. இதை மூடப்படக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் போக்கி, ஒன்பது ஆண்டுக் காலமாகச் செயல்படாத சங்கத்தின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சங்க உறுப்பினர்களின் முதலுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பரிசீலனை செய்து நடவடிக்கை அவசியம் எடுக்கப்படும்.